<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

**<u>அசல் மனு எண்</u> : 113/2012**

**PW1 : திரு. மூர்த்தி, த/பெ.காசிராஜன்**

**11.09.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்கு எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2004ம் வருடம் முதல் இடம் விற்ற பணம் எனக்கு வந்து சேரவில்லை என்பதால் தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி காசிராஜன் என் தகப்பனார். 2ம் பிரதிவாதி என் உடன்பிறந்த தங்கை. பிரதிவாதி சங்கர் என் தங்கையின் கணவர். பிரதிவாதி யுவராஜன் என் தங்கையின் மகன் ஆவார். என் பிறந்த வருடம் 20.03.1959 ஆகும். நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் தகப்பனார் டன்லப் ல் வேலை செய்தார். அங்கே fitter ஆக வேலை செய்தார். நானும் அங்கே தான் வேலை செய்தேன். என் தந்தை 1989 அல்லது 1990ம் வருடத்தில் ஓய்வு பெற்றிருக்கலாம். எனக்கு சரியாக தெரியவில்லை. நான் 1980ம் வருடத்தில் அங்கு வேலைக்கு சேர்ந்தேன். அதற்கு முன்பாக 12 வருடங்கள் டன்லப் கம்பெனியில் casual labourer ஆக பணிபுரிந்தேன். மேற்படி விவரத்தை என் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை, என் சம்பள ரசீதை கொடுத்துள்ளேன். என் அம்மா பால், தயிர் வியாபாரம் மற்றும் விறகு வியாபாரம் செய்தார். என் அம்மா எந்த வருடத்தில் இறந்தார் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் என் அம்மா 22.05.1996 அன்று இறந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். என் சொந்த ஊர் கேசிக்கார்டன், பெரவள்ளூர் ஆகும். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கேட்டினமல்லி என்ற கிராமம் என் அம்மாவின் அம்மா ஊர் ஆகும். அந்த கிராமத்தில் எங்கள் குடும்பச் சொத்து இருந்ததா என்றால் இல்லை. அது நான் சம்பாதித்து என் அம்மாவின் பேரில் வாங்கினேன். அந்த சொத்துக்கள் எப்போது வாங்க ஆரம்பித்தேன் என்றால் 1980ம்

வருடத்திலிருந்து வாங்கினேன். என் அம்மா 1974ல் இரண்டு சொத்துக்கள் வாங்கினார். மற்றவை நான் வாங்கினேன். சொத்து யார் வாங்கினார் என்றால் நான் என் அம்மாவிடம் பணம் கொடுத்து என் அம்மா வாங்கினார். நான் வேலைக்கு சென்றுவிடுவேன். நான் டன்லப் ல் casual labourer ஆக இருக்கும்போது தினசரி சம்பளமா அல்லது வாரச்சம்பளமா என்றால் வாரச்சம்பளம் ஆகும். எவ்வளவு சம்பளம் என்றால் வாரத்திற்கு 300 ரூபாய் வரை வாங்கியிருக்கிறேன். என் தங்கை அன்புச்செல்விக்கு எப்போது திருமணமானது என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் தங்கையின் கணவர் எங்கு வேலை பார்க்கிறார் என்றால் அவர் Overseer ஆக அரசாங்கத்தில் வேலை செய்கிறார். அடிக்கடி பணிமாறுதல் வந்துக்கொண்டே இருக்கும். அவர் மாத சம்பளம் எவ்வளவு என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என் அம்மா பேரில் கேட்டினமல்லி கிராமத்தில் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் எப்போது விற்கப்பட்டது என்றால் 2004ல் இருந்து 2006 க்குள் விற்கப்பட்டது. என் அம்மாவிற்கு நானும் வாரிசு என்பதன் அடிப்படையில் சொத்துக்களை விற்கும்போது கிரைய ஆவணத்தில் கையொப்பம் செய்தேனா என்றால் என் தந்தை கூறியதால் கையொப்பம் செய்தேன். மொத்த கிரைய தொகை எவ்வளவு என்றால் என் தந்தை 80 லட்சத்திற்கு விற்றதாக கூறினார். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள வரிசை ஏ உள்ள சொத்துக்கள் சிந்தாமணி நகர் விரிவாக்கம் பகுதியில் உள்ளது என்றாலும் அது யார் பெயரில் உள்ளது என்றால் 3ம் பிரதிவாதி சங்கர் பெயரில் உள்ளது. அதை சங்கர் 2006ம் வருடம் வாங்கினார். வரிசை பி கும்மிடிப்பூண்டி வட்டம், கேட்டினமல்லி கிராமத்தில் சர்வே 165/3ஏ சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் அன்புச்செல்வி பெயரில் இருந்தது. அந்த சொத்தை தற்போது விற்றுவிட்டார்கள். மேற்படி விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 36 செண்ட் நிலத்தை நானும் என் தங்கையும் சேர்ந்து தான் விற்றோம் என்றால் சரியல்ல. 29.02.2006 அன்று ஆவண எண். 4346/2006 கீழ் நானும் என் தங்கையும் சேர்ந்து விற்றோம் என்றால் சரியல்ல. வரிசை இ சாம்பசிவம் தெரு இடம் யார் பெயரில் உள்ளது என்றால் சங்கரின் அம்மாவின் பெயரில் இருந்தது. தற்போது சங்கரின் பெயரில் உள்ளது. என்னிடம் ஒரு லட்சம் வாங்கிச்சென்று தான் சங்கர் அவரது அம்மா பெயரில் இடம் வாங்கினார் என்று வாதுரையில் கூறியுள்ளேனா என்றால் தெரியாது. வழக்கு விவரங்களை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு எனது

வழக்கறிஞருக்கு யார் கூறினார்கள் என்றால் நான் தான் கூறினேன். வரிசை சி முனுசாமி நகர் விரிவாக்கம், பொன்னியம்மன் மேட்டில் உள்ள இடம் யார் பெயரில் உள்ளது என்றால் 2ம் பிரதிவாதி அன்புச்செல்வி பெயரில் உள்ளது. எந்த ஆண்டு வாங்கினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வரிசை டி ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, ஸ்ரீவிநாயக நகரில் உள்ள இடம் யார் பெயரில் உள்ளது என்றால் 2ம் பிரதிவாதி அன்புச்செல்வி பெயரில் உள்ளது. எந்த ஆண்டு வாங்கினார்கள் என்றால் எனக்கு ஞாபகமில்லை.

**(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.